# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12 ஜூலை -1999 இதழ் - 7



"ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

**தமிழ்நாடு, இந்தியா.**

## அரிய வாய்ப்பு

**திருமறை ஆசான்** மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. **E.Z. செல்வநாயகம்** அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து **"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள **இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.**

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 25/— மாத்திரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கைஇரண்டு போதும். | 1 |
| 2. | சுவிசேஷ பணி செய்வது எப்படி? | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | தெரிந்து கொள்ளுங்கள் | 17 |
| 5. | வெளிப்படுத்தின விசேஷசம் பின்னணி (பாகம் _3) | 20 |
| 6. | வாலிபர் பகுதி | 25 |
| 7. | தேவனை நேசித்தல் | 29 |
| 8. | மதமாற்றமா அல்லது மனமாற்றமா? | 31 |

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

**Published by Church of Christ**
**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 12 JULY -1999 Issue - 7


ஆசிரியவுரை

# கை இரண்டு போதும்

இந்த தலைப்பைப் பார்த்த மாத்திரத்தில், 'எதற்கு' என்ற கேள்வி இயல்பாகவே எல்லோருக்கும் வந்து சேரும். கூப்பி கும்பிடுவதற்கா அல்லது உழைத்து உண்பதற்கா அல்லது கோர்த்து கூடுவதற்கா அல்லது அணைத்து ஆதரிப்பதற்கா அல்லது ஆரத்தழுவி ஆறுதல் சொல்வதற்கா அல்லது தட்டித் தாளம் போடுவதற்கா அல்லது வேறு எதற்குத் தான் என்று எண்ணத் தோன்றும். ஆனால், இங்கே நான் சொல்ல வருவது, மானிடமனைத்திற்கும் மா தேவன் கொடையாகக் கொடுத்திருக்கும் சரீரத்திலுள்ள இரண்டு கைகளைப் பற்றியல்ல. அப்படியிருந்திருந்தால், "கைகள் இரண்டு போதும்" என்று தான் தலைப்பிட்டிருப்பேனே தவிர, "கை இரண்டு போதும்" என்று எழுதியிருக்க மாட்டேன். நான் சொல்ல வருகின்ற "கை" எது என்பதை நாம் தொடர்ந்து படிக்கும்போது அறிந்து கொள்ளலாம்.

சரி, கடந்த இரண்டு வாரங்களுக்கு முன், திருமணமாகி ஓரிரு மாதங்களே ஆன ஒரு இளைஞனைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு கிட்டியது. அவர் பட்டப்படிப்பு முடித்துவிட்டு சில லட்சம் ரூபாய்களை முதலீடு செய்து நிறைந்த வருமானம் தரும் தொழிலை வெற்றிகரமாகச் செய்து வருகிறார். மனைவிக்கு நல்ல வருமானம் தரக்கூடிய அரசுவேலை. குடும்ப பாரம் எதுவுமேயில்லாத பின்னணி. அவரிடம் நான் செலவிட்ட சிறிது நேரத்தில், தனது எதிர்காலத்தைப்

பற்றிய கடுமையான கவலையை வெளியிட்டார். வளமான வாழ்வுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லையென்று அங்கலாய்த்து, ஆஜானுபாகுவான உடலமைப்பைக் கொண்ட அவர், தனது பெலவீனமான நிலையை அப்பட்டமாக வெளிப்படுத்தினார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவரை அனுப்பிவிட்டு, உட்கார்ந்து யோசித்துப் பார்த்தேன். மனக் கண்களால் சமுதாயத்தைச் சுற்றி வலம் வந்தேன். அந்த இளைஞன் இன்றைய சமுதாயத்தின், ஒட்டு மொத்த பிரதிபலிப்பாகவே எனக்குத் தெரிந்தார். அவரைப் போலொத்த மனநிலைதான், சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் மண்டிக் கிடக்கிறதென்பதை உணர முடிந்தது. ஆனால், உண்மையென்னவெனில், முன்னெப்போதும் இராத அளவில், தற்காலத்தில் தான் ஆயுள் காப்பீட்டு கழகங்களாலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளாலும், பல தனியார் நிறுவனங்களாலும் சீரிய வாழ்வுக்கான சீர்மிகு திட்டங்கள் வாரி வழங்கப்படுகிறது. ஆயினும், மனிதன் தனது வாழ்வில் பெலமிழந்து பாதுகாப்பற்றவனாகவே காணப்படுகிறான். அப்படியானால், இதிலடங்கியிருக்கும் இரகசியம் தான் என்ன? ஏன் இந்த அவலநிலை? இதிலிருந்து நாம் எதை அறிய முடிகிறது? உலகியல் ரீதியாக மனிதனுக்குக் கிடைக்கும் எதுவுமே அவனுடைய நிம்மதியான, பாதுகாப்பான வாழ்வுக்குத் தேவையான பெலனைக் கொடுப்பதில்லையென்பது நமக்குத் திட்டமும், தீர்மானமுமாகத் தெரிகிறது.

அப்படியானால், ஒருவன் பாதுகாப்புணர்வோடும், இப்பூமியில் வாழ்வதற்குத் தேவையான பெலத்தோடும் வாழவே முடியாதா என்ற நியாயமான கேள்வி எழுகிறது. இதற்குப் பதில் **“முடியும்”** என்பது தான். ஆனால், கண்டிப்பாக மனிதனின் முயற்சியாலும், அவன் தீட்டும் திட்டங்களாலும், அவன் போடும் கணக்குகளாலும் முடியாது. அப்படியானால், அந்த பெலன் வேறு எங்கிருந்துதான் கிடைக்குமென்கிறீர்களா? வானத்தையும், பூமியையும் உண்டாக்கி, மனிதனை இப்பூமியில் படைத்த தேவன், தனது தாசனாகிய ஏசாயாவைக் கொண்டு, இக்கேள்விக்கு சரியான பதிலைக் கொடுக்கிறார். பாருங்கள். **“...அமரிக்கையும், நம்பிக்கையும் உங்கள் பெலனாயிருக்கும்** என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்.....”(ஏசாயா 30:15) நம் வாழ்வுக்கான பெலனைத் தரக்கூடியது அமரிக்கையும், நம்பிக்கையும் தான் என்பது இங்கே சர்வ வல்லவரால் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆம், இந்த இரண்டு “கை”யும் இப்பூமியின் வாழ்வுக்குப் போதும்.

இந்த **இரண்டு கையும்** எப்படி போதுமென்று நாம் தெரிந்து கொள்வதற்கு முன்பாக, **அமரிக்கையும், நம்பிக்கையும்** போதுமென்று எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டதென்று பார்த்து விடுவோம்.

அழிவைக்குறித்தும், அதற்குப் பிறகு வரும் நம்பிக்கையைக் குறித்தும், தெற்கு இராஜ்ஜியமாகிய யூதாவுக்கு, அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக சாதுரியமாகப் பிரசங்கித்து, “பழைய ஏற்பாட்டின் பவுல்” என்று பெயரெடுத்த ஏசாயா தீர்க்கனின், நூலில் உள்ள “ஐயோ பகுதியில்”, நமது இரண்டு கை, பற்றிய வசனப் பகுதி அடங்கியுள்ளது. இந்த ஐயோ பகுதி என்பது, 28-ம் அதிகாரம் தொடங்கி 35-ம் அதிகாரம் முடிய உள்ள எட்டு அதிகாரங்களைக் கொண்டது. வேதாகமத்தின் இந்தக் காலக் கட்டத்தில், தேவனுடைய ஜனங்கள், அவரைவிட்டு வெகுவாக விலகி, தேவனுக்கு விரோதமான காரியங்களில் தங்களை ஆர்வத்தோடு ஈடுபடுத்திக் கொண்டனர். ஆகவே, தேவ கோபம் வெளிப்பட்டு, வரப்போகும் அழிவு அப்பகுதியில் முன்னுரைக்கப்பட்டுள்ளது.

நமது தலைப்பு இடம் பெற்றுள்ள, முப்பதாம் அதிகாரத்தில் இது பற்றி நாம் ஓரளவு விபரமாகத் தெரிந்து கொள்ளலாம். கி.மு. எட்டாம் நூற்றாண்டின் பின்பகுதியில் அசீரியா, ஒரு அசுர பலம் கொண்ட நாடாக எழும்பி, பல பக்கத்து நாடுகளை தனக்குப் பணிந்து போகும்படி செய்தது. எசேக்கியா ராஜாவாக இருந்த அந்த நாட்களில், யூதாவும் அதற்கு விதிவிலக்காக இருக்க முடியவில்லை.

அச்சமயத்தில் எகிப்தை வெற்றி கொண்டிருந்த எத்தியோப்பிய அரசன் செபாகோ என்பவன், யூதாவுக்கு தூதர்களை அனுப்பி, அசீரியாவுக்கு எதிராகக் கலகம் செய்யும் படி தூண்டி , அவர்களுக்கு ஆதரவாக தன் கரத்தை நீட்டினான், அது, அசீரியரின் பெலத்தாலும், ஆளுகையாலும் சோர்ந்து போயிருந்த யூதர்களுக்கு மனத்தெம்மை ஊட்டியது. தங்களை ஒடுக்குகிறவர்களுக்குப் பாடம்புகட்ட சரியான சந்தர்ப்பம் கிடைத்ததென எண்ணி, எகிப்தின் பக்கம் அப்படியே சாய்ந்து கொண்டனர். ஆனால்,“**ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு**” (சங்.50:15) என்று சொன்ன தேவனின் வார்த்தையை மறந்து, எதிரிக்கு எதிராக, தங்களைப் பெலப்படுத்திக் கொள்ள எகிப்தின் பக்கம் சாய்ந்து கொண்டதை வேதம் இவ்விதம் கூறுகிறது. “**பாவத்தோடே பாவத்தைக் கூட்டும்படி, என்னை அல்லாமல் ஆலோசனை பண்ணி என் ஆவியை அல்லாமல் தங்களை மூடிக் கொள்ளப் பார்க்கிறவர்களும், என் வாக்கைக் கேளாமல் பார்வோனின் பெலத்தினாலே பெலக்கவும், எகிப்தின் நிழலிலே ஒதுங்கவும் வேண்டுமென்று எகிப்துக்குப் போகிறவர்களுமாகிய முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார்**” (ஏசா. 30:1,2)

இந்த இரண்டு வசனங்களையும் உற்று நோக்கின், யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா எகிப்தின் உதவியை ஏற்றுக்கொண்டது. **"பாவத்தோடே பாவத்தைக் கூட்டுகிற ஒரு செயல்"** என்று கோடிட்டுக் காட்டப்படுகிறது. ஏன் இவ்விதம் சொல்லப்பபடுகிறது? நீதியுள்ள நமது தேவன் காரணமில்லாமல், ஒரு செயலைக் குற்றப் படுத்தமாட்டார். ஆகவே, இதற்கு பலமான காரணம் இல்லாமலிருக்காது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில், குறிப்பாக ஏசாயா தீர்க்கனின் நாட்களில் புறஜாதி நாடுகள் ஒவ்வொன்றும், தங்களுக்கென்று போரிடுவதற்காக ஒரு போர் தெய்வம் அல்லது தெய்வங்கள், இருப்பதாகவும் அவர்கள் போரிடும் போது, அவர்களோடு சேர்ந்து எதிரியை முறியடிக்க அத்தெய்வங்களும் போரிடுகிறதென்று திடமாக நம்பின.

ஆகவே, யூதா, ராணுவரீதியாக, தங்களின் பாதுகாப்புக்கு எகிப்தை நாடும் போது, அவர்கள் யெகோவா என்னும் நாமமுள்ள தங்கள் தேவனை மறுதலித்து, தங்களின் பாதுகாப்புக்காக, எகிப்தின் தெய்வங்களை நாடுவதாகவே அதற்குப் பொருள். (2 ராஜா 18 :28-38), (2 நாளா.32:9-23) இச்செயல், **"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்"** (யாத். 20:3) எனச் சொன்ன மெய்யான தேவனின் கட்டளைக்கு முற்றிலும் விரோதமான ஒன்று, எனவேதான், எகிப்தின் ராணுவக்கூட்டு, பாவத்தோடே பாவத்தைக் கூட்டுகிற ஒரு காரியமாகச் சொல்லப்பட்டுள்ளது. தொடர்ந்து, நாம் அவ்வதிகாரத்தைப் படித்தால், எகிப்தின் ஆதரவு எதற்கும் லாயக்கற்றது என்பதையும், எடுத்துக் கூறிவிடுகிறார். **"எகிப்தியர் சகாயம் பண்ணுவது வியர்த்தமும், வீணுமாம்; ஆகையால், சும்மாயிருப்பதே அவர்களுக்குப் பெலன் என்று அதற்காகக் கூறுகிறேன்"** (ஏசாயா.30:7).

அநேக சமயங்களில் மனிதர்களாகிய நாம், மற்றொருவர் செய்யும் செயலைத் தவறு என்றும், அது வீணிலே தான் முடியுமென்றும் மிகச் சுலபமாகச் சொல்லிவிடுவோம். அதற்கு மாற்றாக, இப்படிச் செய்வது தான் சரி என்றும் அல்லது பிரயோஜனமானது என்றும் சொல்லமுடிவதில்லை. ஆனால், தேவ மனிதனாகிய ஏசாயா தீர்க்கனோ, தவறைச் சுட்டிக் காட்டுவதோடு நிற்காமல், பாதுகாப்பும், பெலனும் அற்று இருக்கும் யூதர்களுக்கு, எது பெலனைக் கொடுக்கும் என்பதையும், தெளிவாக்கி விடுகிறார். " **நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும், நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும். (ஏசா.30:15) என்று.**

யூதாவின் ஜனங்களே, நீங்கள் சுகமாகவும், பாதுகாப்பாகவும் வ ாழ்வதற்குத் தேவையான பெலன், **எகிப்தியரின் சரீரக் கைகளில் இல்லை,** மாறாக, நான்

சொல்லும் இந்த இரண்டு "கை"யில் தான் உள்ளது என்று சொல்லப் பட்டிருக்கிறபடியால், இந்த இரண்டு கையில் அடங்கியுள்ள பேருண்மைகள் என்னவென்று, நாமும் தெரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

## I முதல் 'கை' – அமரிக்கை

பெலமான வாழ்வுக்கு ஏசாயாவைக் கொண்டு தேவன் கொடுக்கும் முதல்"கை" அமரிக்கை. இதற்கு"அமைதி" என்று பொருள். அதற்காக, வாய்மூடி நிசப்தமான சூழலில் மௌனவிரதம் மேற்கொள்ள வேண்டும் என்பதல்ல. மாறாக, பதட்டத்திற்கும், பரபரப்பிற்கும், தாறுமாறான சிந்தனைக்கும், ஆத்திர அவசரமான செயல்பாட்டிற்கும், காரணமில்லாத முறுமுறுப்பிற்கும், விளைவு தெரியாமல் மேற் கொள்ளப்படும் முயற்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, நமது வாழ்க்கையில் தேவச்சித்தம் நிறைவேற நம்மை அனுமதிக்கும் ஒரு அசாதாரண நிலைதான், இங்கு குறிப்பிடப்படும் அமரிக்கை அல்லது அமைதி என்பதாகும்,

நாம் வாழ்கின்ற இந்த நாட்களைக் கவனித்துப் பார்த்தால், அமைதி என்பது மனிதனுக்கு அரிதான ஒன்றாகிவிட்டது. வாழ்க்கை முறையானது, அவன் எதைப் பற்றியும் சரியாக சிந்திக்கவிடாமல் செய்துவிட்டது. செல்லும் திசை தெரியாமலே அவன் படுவேகமாகச் சென்று கொண்டுள்ளான். எப்பொழுதும் அவனைச் சுற்றி ஒரு அவசரமும் ஒரு சந்தடியான நிலையும் தெரிகிறது. சரி, பணிபுரிகிற இடங்களிலிருந்து, தன்னை விடுவித்துக் கொண்டு, வீடு வந்து சேர்ந்து, அப்பாடா என்று அமரலாம் என்று சொன்னால், அங்கும் பல வகையான சத்தங்களின் தொல்லை அவனை வாட்டி வதைக்கிறது. வானொலி, தொலைக்காட்சி, டேப்ரெக்கார்டர், என்று ஒரே சத்தமயம் தான். ஒருவேளை, இக்கால கட்டத்தை சப்தங்களின் யுகம் என்று சொன்னாலும் தவறில்லை.

இப்படி எப்போதும் ஓயாத சத்தம், உங்களைச் சுற்றியிருக்கிற ஏதாவதொரு சூழ்நிலையில், உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நீங்கள் முயற்சித்ததுண்டா? அம்முயற்சியில் நீங்கள் வெற்றி பெற்றதுண்டா? சொல்லுங்கள். இல்லையென்றால், ஏன் முடியவில்லை? அமைதியற்ற ஒரு சூழலில் எந்த மனிதனாலும் எதையுமே சிந்திக்க முடியாது. சிந்திக்க முடியாத ஒருவனால் தன் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. தன் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாமல், அவைகளுக்குள் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கும் ஒருவனால் எப்படி பெலத்தோடு வாழ முடியும்? சொல்லுங்கள்.

ஆகவே தான், தேவனுடைய வார்த்தை, பெலமான வாழ்விற்கான முதல் "கை" யாக அமரிக்கையை நமக்கு அளிக்கிறது. அமைதியான ஒரு சூழல்

எப்பொழுதும், தன் நிலையை உணர்ந்து பார்க்க ஒருவனுக்கு உதவி செய்யும், தன் நிலையை உணரும் ஒருவன் தனக்காக இப்பூமியில் யாரைச் சார்ந்திருப்பது சரியானது என்பதைக் கட்டாயம் கண்டுகொள்வான். குறிப்பாக, தேவனை அறிந்த ஒருவன், அமைதிகாக்கும் போது, தேவன் யார் என்பதையும், ஏன் அவரைச் சார்ந்திருக்க வேண்டுமென்பதின் அவசியத்தையும் அறிந்து கொள்ளுவான்.. தேவன் யார், என்பதை நாம் இவ்விதமாகத் தான் அறிந்து கொள்ள முடியுமென்று, வேதம் கூறுவதை கவனியுங்கள். **"நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்_"** (சங்.46:10) என்று. இங்கே அமர்ந்திருங்கள் என்பது, உட்கார்ந்து கொண்டு என்பதல்ல, மாறாக அமைதியாக இருந்து என்பது தான். ஆம் அமைதியாக இருக்கும் போதுதான், அவரைத் தேவனென்று அறிந்து கொள்ளமுடியும்.

அநேக சமயங்களில் தேவ இரக்கம், அவருடைய பிள்ளைகள் அமைதியாக இருந்த வேளைகளில் கிடைத்திருக்கிறது. உதாரணமாக, பார்வோனின் இரும்புக்கரம் தேவனுடைய வல்லமையான கரங்களுக்கு முன் நொறுங்கிப்போன படியால், வேறு வழியின்றி அவன் ஜனங்களை எகிப்திலிருந்து அனுப்பி வைத்தான். ஆனால், மீண்டும் அவன் தன் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டு, இஸ்ரவேல் புத்திரரைப் பின் தொடர்ந்தான். (யாத் 14:8). பார்வோனின் படை திரண்டு வருவதைத் திரும்பிப் பார்த்த இஸ்ரவேல் ஜனங்கள், மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தது, ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடி ஏச ஆரம்பித்து விட்டனர். (யாத், 14:1,12) அப்பொழுது "மோசே, ஜனங்களை நோக்கி பயப்படாதிருங்கள்; நீங்கள் **நின்றுகொண்டு** இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்..."(யாத் 14:13) என்றான். இங்கே, மோசே **"நின்று கொண்டு"** என்பதின் பொருள், **"அமைதியாக இருந்து"** என்பது தான். என்ன நடந்தது? மோசே சொன்னபடியே தேவன் அவர்களைக் காப்பாற்றினார்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், நமது வாழ்க்கைக்கான பாதுகாப்பையும் பெலனையும், நமது முயற்சியினால், பெற்று விடலாம் என்று நினைக்காமல், அமைதி காத்து தேவனைச் சார்ந்திருப்போம். நமது முயற்சியினால் ஒன்றும் ஆகாது என்பதற்கு ஆதாரமாக, ஞானி சாலமோன் சொல்வதைக் கேளுங்கள், **"_ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது; பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது! ஐசுவரியம் அடைகிறதற்குப் புத்திமான்களின் புத்தியும் பேதாது; தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது; அவர்க ளெல்லாருக்கும் சமயமும்,தேவச்செயலும்நேரிட வேண்டும்"** (பிரசங்கி 9:11)

## II இரண்டாம் "கை" – நம்பிக்கை

பெலமான வாழ்வுக்கு தேவன் கொடுக்கும் இரண்டாவது "கை" நம்பிக்கை. அமரிக்கைக்கு அடுத்தபடியாக நம்பிக்கை வருகிறது. அமரிக்கையில்லாமல், நம்பிக்கையை ஒருவனாலும் பெற்றுக்கொள்ள முடியாதென்பதால், அதற்கடுத்தபடியாக சொல்லப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் நம்பிக்கையும், விசுவாசமும் கிட்டத்தட்ட ஒரே பொருளையுடைய இரண்டு வார்த்தைகளென்று கருதப்பட்டாலும், பழைய ஏற்பாட்டின் காலத்தில் நம்பிக்கையென்பதற்கு சிறப்பானதொரு அர்த்தம் இருந்துள்ளது. **"யெகோவா செய்யப்போகிற காரியங்களைக் குறித்த திடமான எதிர் நோக்கம் மற்றும் அவர் வல்லமையைப் பற்றிய தீர்க்கமான எண்ணம்"** என்பது. கருத்துச் செறிவு மிக்க, இவ்விளக்கத்தினடிப்படையில், ஏசாயாவின் நாட்களில் வாழ்ந்த மக்களுடைய காரியங்களை அணுகி, ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்கள் யெகோவாவின் வல்லமையை சந்தேகித்து எகிப்தின் பக்கம் சாய்ந்து கொண்டபடியால், நம்பிக்கையற்றவர்களாகவே வாழ்ந்துள்ளனர் என்பது நன்றாகவே தெரிகிறது. ஆகவேதான், தேவன், நீங்கள் , என்னை உங்கள் தேவனென்று வெறுமனே சொல்லாமல், பொருள்பொதிந்த நம்பிக்கையை என்மீது காட்டுங்கள் என்று கேட்கிறார்.

எப்படி அமரிக்கை, ஒருவனை நம்பிக்கைக்கு வழிநடத்த முடியும்? என்று நீங்கள் கேட்கக்கூடும். நாம் ஏற்கனவே பார்த்தது போல, அமரிக்கை ஒருவனைத் தன்நிலை உணரும்படி செய்யும், தன் நிலை உணரும் ஒரு மனிதன் தன்னைக் குறித்து அதிகமாகவே சிந்திப்பான். தன்னைக் குறித்துச் சிந்திப்பவன் தன்னைச்சுற்றிலுமுள்ளவைகளைக் கவனிப்பான். கவனிக்கும் ஒருவன் தேவ வல்லமையை ஏதாவதொரு வகையில் உணருவான். தாவீது, சங்கீதம் 19-ல் அதைத்தான் கூறுகிறார். **"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது.ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது"**. (சங்.19:1) தேவனுடைய வல்லமையை உணரும் ஒருவன், அவரின் வார்த்தைகளைக் கண்டு கொள்வான். அதைக் கண்டு கொள்பவன் அதைக் குறித்து தியானிப்பான்.

தியானிக்கும் ஒருவன் அவருடைய வாக்குத்தத்தங்களின் மேன்மையை அறிந்து கொள்வான். அந்த வாக்குத்தத்தங்கள் **"மகா மேன்மையும், அருமையுமானவைகள்"** (2.பேதுரு. 1:4) என்று பேதுரு கூறுகிறார். அந்த வாக்குத்தத்தங்களில் இவ்வாழ்வுக்குத் தேவையான பாதுகாப்பும், பெலனும் ஏராளமாகப் பொதிந்து கிடக்கிறதென்கிற இரகசியம் அவனுக்கு

சந்தேகத்திற்கிடமின்றி விளங்கும். அப்பொழுது, அந்த வாக்குத்தத்தங்களுக்குத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்து, இவ்வாழ்வுக்கான முழு பெலனை அதன் மூலம் பெற்றுக் கொள்ளும்படியான வாய்ப்பு அவனுக்கு ஏராளமாய் பெருகி வரும்.

ஆம்,"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரை நம்புகிற பிள்ளைகளுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது"(சங்.34:10) என்ற வசனத்தைப் படித்து, தேவன் மீது நம்பிக்கை வைக்கும் ஒருவன் தனது வாழ்க்கையில் ஆகாரத்திற்காக கவலைப்பட நேருமா? முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்ற வசனத்தைப் படித்து, அதில் நம்பிக்கை வைக்கும் ஒருவன் உடைக்காகவும் உணவுக்காகவும் சோர்ந்து போவானா? "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்" (ரோமர்.8:28) என்ற வார்த்தையை நம்புகிறவன் தனது வாழ்க்கையில் நேரும் ஏற்றத் தாழ்வுகள் குறித்தும், நிறைகுறைகள் குறித்தும் அலட்டிக் கொள்வானா? "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:13) என்ற வார்த்தைகளைப் படிக்கும் ஒருவன் கிறிஸ்துவுக்காக காரியமாற்ற யோசிப்பானா? " என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி 4:19) என்ற வார்த்தைகளைக் காண்பவன், இம்மைக்குரிய வாழ்வுக்கு முக்கியத்துவம் தருவானா? சொல்லுங்கள். மாட்டவே மாட்டான்.

ஆகவே, எனக்கன்பானவர்களே, தேவன் மீதும் அவரின் வார்த்தைகளின் மீதும் நாம் வைக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை, நாம் எதைப்பற்றியும் கவலைபடாத ஒரு நிலையை வாழ்க்கையில் ஏற்படுத்துகிறது. எதைப் பற்றியும் கவலைப்படாத ஒருவன் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை, சோர்ந்து போக அவசியம் இல்லாத ஒருவன், நிச்சயமாக எப்பொழுதும் பெலம் உள்ளவனாகவே இருப்பான். பெலன் உள்ள ஒருவனுக்கு பாதுகாப்பு உணர்வு மேலோங்கியே இருக்கும்.

ஆகையால் எனக்கு அருமையானவர்களே, இம்மைக்குரிய வாழ்க்கைப் போராட்டத்தில் வகை தெரியாமல் சிக்கி, பாதுகாப்பும், பெலனும் அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும் அவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கர்த்தர் ஏசாயா தீர்க்கனைக் கொண்டு உரைத்துள்ள "இரண்டு கை"யையும் இறுக்கமாக பற்றிக் கொள்வோமாக! ஆம், அமரிக்கையும், தேவன் மீது நம்பிக்கையும் உள்ள ஒருவன் இப்பூமியில் பெலனுள்ள ஒரு ஜீவியாக வாழ்வது திண்ணம்!

தேவன் தாமே உங்களை ஆசிர்வதிப்பாராக! ஆமென்!

# சுவிசேஷப் பணி செய்வதெப்படி?

"நீங்கள் வசிக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையை தொடங்குவது எப்படி" என்ற தலைப்பின் கீழாக நாம் ஏற்கனவே பகிர்ந்து கொண்ட பல காரியங்கள் உங்களுக்கு உதவியாக இருக்கும். நீங்கள் ஒரு கிறிஸ்தவராகவோ, சபையின் அங்கத்தினராகவோ இல்லாமலிருந்தால், நீங்கள் கிறிஸ்தவராவது அவசியம். நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, சபை இல்லாத இடத்தில் வசிப்பீர்களானால், நீங்களே முயற்சி எடுத்து சபையைத் தொடங்க வேண்டும் என்பதே எங்களது வேண்டுகோள். நீங்கள் இவ்வாறு செய்யாவிட்டால், ஐக்கியத்தையும் அநேக ஆசீர்வாதங்களையும் இழக்க நேரிடும். மேலும், உங்களைச் சுற்றி வசிப்பவர்கள் சபையைக்குறித்து அறிந்துகொள்வதையும், அதன் அங்கத்தினராகும் வாய்ப்பையும் இழக்க நேரிடும். எனவே அந்த பணியை செய்ய உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறோம்.

இதை கருத்தில் கொண்டவர்களாக சுவிசேஷப் பணியை செய்வதெப்படி? என்பதைக் குறித்து ஆராயலாம். சபையானது புதிதாகத் தொடங்கப்பட்டாலும், கிறிஸ்துவினிமித்தம் நற்செய்தி அறிவிக்கும் பணி அதற்குண்டு. இதில் நாங்கள் அபார நம்பிக்கையுடையவர்களாயிருப்பதால், நீங்களும் இப்பணி குறித்து உற்சாகமுடையவர்களாயிருக்க விரும்புகிறோம்.

பிரதான கட்டளையிலிருந்து ஆரம்பிப்பது தான் சுவிசேஷப் பணியின் அவசியத்தை நாம் பார்ப்பதற்கு சிறந்த வழியாகும். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர் பிதாவினிடத்திற்கு செல்லும் முன்பாக, இயேசு அப்போஸ்தலர்களிடம் பேசினார். "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"(மாற்கு 16:15,16). மேலும், அவர் கூறினார். ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா,குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்".(மத்.28:19, 20). லூக்கா இப்படியாய் எழுதுகிறார். "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல

தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்". (லூக்கா 24:46-49). இறுதியாக, இயேசுவின் வார்த்தைகளை நாம் வாசித்தோமானால், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்".(அப்.1:8).

மேற்கூறப்பட்டுள்ள வேதவாக்கியங்களில் ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், சுவிசேஷம் உலகமெங்கும் எடுத்துச் செல்லப்படவேண்டும், உலகிலுள்ள எல்லா தேசத்திற்கும், உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு நாட்டின் சிருஷ்டிகளுக்கும் அது எடுத்துச் செல்லப்படவேண்டும். இந்த சுவிசேஷம் முதலாவது எருசலேமிலும் பின்பு யூதேயாவிலும், அதற்குபின்பு சமாரியாவிலும், இறுதியாக பூமியின் கடைசிபரியந்தமும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று சொன்னார். இந்தக் காரியத்தைச் செய்வதற்கு அவர்களை வழிநடத்தும்படியாக பரிசுத்த ஆவியின் வல்லமையை அப்போஸ்தலர்களுக்கு தருவேன் என்றும் சொன்னார். பாருங்கள், புதிய ஏற்பாடு முழுமையான எழுத்து வடிவில் வெளிப்படுவதற்கு முன்பான காலத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள். ஆகையால், இன்றைக்கு நம்மிடம் இருக்கும் புதிய ஏற்பாடு, முழுமையாக எழுத்துவடிவில் வெளிப்பட்டு இருப்பதால், இனிமேலும் நமக்கு பரிசுத்த ஆவியின் அற்புதமான வழி நடத்துதல் வேண்டியதில்லை.

இப்பொழுதும் அப்.2ம் அதிகாரத்துக்கு நாம் செல்லுவோமானால் அங்கு அப்போஸ்தலர்கள் எருசலேம் பட்டணத்தில் கூடியிருந்ததைக் காணலாம். உண்மையில் சுவிசேஷம் அறிவிக்கப்படவும் இல்லை, சபையும் அப்பொழுது நடைமுறையிலும் இல்லை. ஆனால், பிறகு அப்போஸ்தலர்களை வழிநடத்தவும், அந்த நாட்டு மக்களின் மொழிகளில் பேசும்படியாக உதவவும் அற்புதங்களை நிகழ்த்த ஏதுவாகவும் அவர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். அவர்கள் கள்ளப் போதகர்கள் அல்ல என்பதையும் உண்மையில் தேவனுடைய மனுஷர்கள் என்பதையும் மக்கள் நம்பும்படியாக இந்த வரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தப் பிறகு, வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில், உலகெங்குமுள்ள யூதர்கள் அதனை கொண்டாடும் படியாக கூடிவந்திருந்தனர். கர்த்தர் சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக அந்த நாளை தேர்ந்தெடுத்தார்.அதன் விளைவாக மூவாயிரம் பேர், நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள விரும்பினர்."பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக்

கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்... அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். (அப்2:38,41,47). இப்படியாக, கர்த்தரின் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. சுவிசேஷம் மீண்டும் மீண்டுமாக பிரசங்கிக்கப்பட்டது. அநேகர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். பின்பு பிலிப்பு சமாரியாவரை சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்த வேளையில், அநேகர் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள். மேலும், அப். 8ம் அதிகாரத்தில் எத்தியோப்பியாவிலிருந்து வந்த மந்திரிக்கு பிரசங்கிக்கும்படி பிலிப்பு கர்த்தருடைய தூதனால் வழிநடத்தப்பட்டான். அவன் கேள்விப்பட்டபடி செய்து கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தான். அவன் தன் நாட்டுக்குத் திரும்பிச்சென்று, கிறிஸ்து வந்ததின் நோக்கத்தை, உலகத்தின் அந்த பகுதியிலுள்ள மக்களுக்கு எடுத்துரைத்திருப்பான் என்பதில் ஐயமில்லை. இப்படியாய் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு, சபை அநேக இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டது.

அப்.9ம் அதிகாரத்தில் சவுலின் மனமாற்றத்தைக் குறித்து வாசிக்கிறோம். அவர்தன் வெவ்வேறு சுவிசேஷப் பிரயாணங்களில் என்ன செய்தார் என்பதும் நமக்குக் தெரியும். ஆசியா முழுவதிலும். ஏன் ஐரோப்பாவிலும் கூட சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அந்த சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வந்தது என்று கொலோ. 1:23ல் கூறினார். மேலும் சுவிசேஷத்தின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது என (ரோமர் 10:18ல்) அவர் கூறினார். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு முப்பது ஆண்டுகளுக்குள்ளாக அது உலகமெங்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள்! ஆம், சபையானது எருசலேம், அந்தியோகியா, கொரிந்து, எபேசு, பிலிப்பி, தெசலோனிக்கேயா, பெரேயா, கொலோசெ மற்றும் ரோமாபுரி ஆகிய இடங்களிலும், உலகெங்குமுள்ள ஆயிரக்கணக்கான பகுதிகளிலும் ஸ்தாபிக்கப்பட்டது. இதை எப்படிச் செய்ய முடிந்தது? அப்போஸ்தலர்கள் தங்கள் பணியை எருசலேமில் ஆரம்பித்தனர். அவர்கள் வாழ்வில் மீதமிருந்த நாட்களில் பல்வேறு இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து கர்த்தருடைய சபையை ஸ்தாபித்தனர். ஆனால் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் அவர்களால் செய்ய இயலவில்லை. ஆகையால், அவர்கள் மூலம் மனந்திரும்பியவர்கள் சுவிசேஷத்தை உலகெங்கும் பிரசங்கிப்பதில் உதவி செய்தனர். பிலிப்பு, ஸ்தேவான், மற்றும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான

விசுவாசிகள் அந்நாட்களில் இருந்தனர். அப்போஸ்தலரோ, அவர்களால் மனந்திரும்பியவர்களோ, புதிய இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவித்தபொழுது அவர்கள் அதைக் கேட்டு, விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களை கர்த்தர் இரட்சித்து தமது சபையிலே சேர்த்துக்கொண்டார். இவ்வாறு கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு ஆங்காங்கே சபைகள் உருவாயின. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாக அங்கே அவர்கள் தங்கியிருந்தனர். அநேகர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததால், சபை வளர்ந்தது. சிலவேளைகளில் அவர்கள் அங்குள்ள மற்றப் பட்டணங்களுக்கும், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர்; அங்கேயும் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வாறு கிறிஸ்து வந்ததின் நோக்கம் உலகெங்கும் பரவும் வரை இது தொடர்ந்தது.

உலகம் முழுவதும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல இன்றும் கர்த்தர் நமக்கு கட்டளையிடுகிறார். நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்திருந்தால், இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள், மேலும், கர்த்தருடைய சபையில் அங்கத்தினராயும் இருக்கிறீர்கள், ஆனாலும், நீங்கள் இருக்கும் இடத்தில் சபை இல்லாதிருக்கலாம். எப்படி அங்கே சபை இருக்க முடியும்? அங்கேயுள்ள மக்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் தான் சபை இருக்க முடியும். உங்கள் நண்பர்களையும் குடும்ப அங்கத்தினர்களையும் வைத்து அதை தொடங்கலாம். இப்படிச் செய்வது ஒரு ஆணுக்கு சுலபமாயிருக்கும். ஆனால், ஒரு பெண்ணோ அல்லது இளைஞரோ இதை எப்படிச் செய்ய முடியும்? அப்படி இருக்குமானால், நீங்கள் தனிப்பட்ட முறையில் உபதேசிக்கலாம் அல்லது சில கூட்டங்கள் நடத்த உதவும்படியாக வேறொருவரை அழைக்கலாம். நீங்கள் அங்கே கிறிஸ்தவராக இருந்தால், உண்மையாக அங்கே ஒரு சபையை உருவாக்க விரும்பினால், அதைச் சாத்தியமாக்க உதவும்படியாக ஏதாவது செய்ய முடியும் என நிச்சயமாக நம்புகிறேன்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க சுவிசேஷக் கைப்பிரதிகளையோ பத்திரிக்கைகளையோ பயன்படுத்தலாம். தனிப்பட்ட பாடங்கள் நடத்தலாம். மேலும் வேதாகம வகுப்புகள் ஒழுங்கு செய்யப்படலாம்.

தேவனுடைய வார்த்தையை போதுமான அளவு உபதேசிக்கும் பொழுது, மனந்திரும்புதல் உண்டாகும். அவ்வாறு மனந்திரும்பியவர்களைக் கொண்டு சபையை தொடங்கலாம். அதாவது, அங்கேயுள்ள கிறிஸ்தவர்கள் ஒரு வீட்டிலோ, பள்ளியிலோ, அறையிலோ அல்லது மரத்தடியிலோ கூடி தொடங்கலாம். நீங்கள் கூடிவருவதும், ஆராதிப்பதும், தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை

உபதேசிப்பதுமே முக்கியமான காரியம். சுவிசேஷ பணியாளராய் இருங்கள், எப்போதும் பிறருக்கு உபதேசிக்கும் தருணத்தை எதிர்நோக்கி இருங்கள். அந்தப் பணியை செய்துகொண்டே, சில வேளைகளில் அந்தப் பகுதியிலுள்ள நகரத்தில் மற்றும் கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முயற்சிகள் எடுக்கலாம்.

நாம் இருப்பதை வைத்து திருப்தியடைவதைக் கர்த்தர் விரும்பவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் போய் பிரசங்கிப்பதையும், மனமாற்றமடையச் செய்வதையும், அவர் நோக்கத்தை அறிவிப்பதையுமே விரும்புகிறார். இந்தப் பணியை நாம் செய்யவே அவர் விரும்புகிறார். நாம் அதைச் செய்யும் பொழுது அவர் நம்மோடிருந்து நம்முடைய முயற்சிகளையும் ஆசீர்வதிப்பார். இந்த சுவிசேஷப் பணியைச் செய்யும் நம்முடைய பிரயசத்தையும் ஆசீர்வதிப்பார். இந்த சுவிசேஷப் பணியைச் செய்யும் நம்முடைய பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் கூட நாம் உபதேசித்து ஊக்கப்படுத்த வேண்டும்.

நீங்கள் இருக்கும் இடத்தில் உங்களால் முடிந்ததை நீங்கள்செய்யும் பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். இந்த முக்கியமான காரியங்களை என்னுடனே கூடச் சேர்ந்து சிந்தித்தற்கு நன்றி!

J.C. CHOATE


# அருமையான வாய்ப்பு

***பரிசுத்த ஆவியானவரின் பணி*** **(170 பக்கங்கள்)** மற்றும் ***புதிய ஏற்பாட்டு ஆராதனை*** **(112 பக்கங்கள்)** ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

***புத்தகம் முற்றிலும் இலவசம்*** ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. 25/–

முகவரி : ***தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்***

தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

*குறிப்பு* : *தயவு செய்து M.O. மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# "உண்மையான ஆராதனை" - ஒரு புதிய அனுபவம்

## (பெண்கள் பகுதி) பாகம் – 15

வழக்கத்துக்கும் மாறாக ரேச்சல் நேரமே விழித்து, ஒரு உற்சாக மனநிலையுடன் காணப்பட்டாள். கிறிஸ்தவர்களாக மாறின பின்பு இதுதான் அவர்களுக்கு முதல் ஞாயிறு! இது தான்முதல் ஆராதனை.

அவள் மெதுவாக தன் படுக்கையில் இருந்து எழுந்து அவர்கள் உட்காருகிற அந்த அறைக்குள் சென்று எல்லாம் சரியான முறையில் ஒழுங்காக இருக்கிறதா என்று பார்க்கிறாள். பின்பு அவள் சமையல்கட்டுக்குச் சென்று ஆராதனையின் ஒரு பங்கான கர்த்தரின் பந்திக்காக அப்பத்தைத் தயாரிக்கலானாள். அவள் கொஞ்சம் மாவை அளந்து எடுத்து எண்ணெய், தண்ணீர் இவைகளுடன் மிகவும் ஜாக்கிரதையாக கலந்து ஒரு சிறிய, தட்டையான அப்பத்தை செய்து, அதே இடத்தில் தன்னை மிகவும் தாழ்த்தி, ஆராதனையின் முக்கிய பங்கான கர்த்தருடைய பந்திக்கான அப்பத்தை இக்கைகள் செய்கிறதே என்று நினைத்து, தேவனுக்கு நன்றி சொல்லி, நாங்கள் இரட்சிக்கப்பட என்ன விலை கொடுத்தார் என்பதை நினைவுகூற, இப்படி ஒரு பந்தியை ஆயத்தம் செய்தீரே! என்று ஜெபித்தாள்.

அன்று 9 மணிக்கு ஆண்ட்ரூவும், ரேச்சலும் அங்கு வந்த எலிசபெத்தையும், அவள் கணவரையும் வரவேற்றார்கள். இந்த புதிய முறையை பார்க்க ஜேம்ஸ் எங்களுடன் வருவதாக இருந்தான் என்று கூறி அவள் சிரித்தாள்.

ஆண்ட்ரூவுடன் பணிபுரியும் அவன் நண்பனாகிய ஜானும் அவர்களுடன் வந்து கலந்து கொண்டான். தன் தங்கையாகிய மேரியும் வந்தது குறித்து ரேச்சல் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.

"ஆவிக்குரிய காரியத்தில் மிகுந்த ஆர்வத்துடன் இங்கு வந்த உங்களுக்கு மிகுந்த நன்றியை தெரிவிக்கிறேன்" என்று ஆண்ட்ரூ ஆரம்பித்தான். "இது எனக்கும், ரேச்சலுக்கும் மிகவும் விசேஷமான நாள். நாங்கள் ஞானஸ்நானம் எடுத்து தேவனை ஆராதிப்பது இதுவே முதல் முறை! எனவே இவைகளுக்கெல்லாம் நாங்கள் புதியவர்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள், ஆனால் நாங்கள் கற்றதை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகுந்த ஆவலுள்ளவர்களாக உள்ளோம்.

"நம்முடைய ஆராதனையை ஜெபத்துடன் துவங்குவது நல்லது என்று நான் நினைக்கிறேன்".

"எங்கள் தகப்பனே, என ஆண்ட்ரூ ஆரம்பித்து உம்மை ஆராதிப்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம். நாங்கள் உம்முடைய பிள்ளைகள். உம்மை "தகப்பனே" என்று உரிமையோடு அழைக்கிறோம். உம்முடைய வார்த்தைகளை

இன்று படிக்கிறோம். நாங்கள் படிப்பதை புரிந்து கொள்ள உதவி செய்யும், எல்லாவற்றுக்கும் மேலாக உண்மை எது என்று நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். தகப்பனே, எங்களுடைய வாழ்க்கையில் நாங்கள் செய்கிற பாவங்களை மன்னியும். அநேக சமயங்களில் நாங்கள் எப்படி இருக்க வேண்டுமோ அதில் இருந்து தவறிவிடுகிறோம். இவை யாவற்றையும் இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்'' என்று முடித்தான்.

தீமோத்தேயு பிறந்த பொழுது நித்தியத்திற்கென்று ஒரு ஆன்மாவை வடிவமைப்பது எவ்வளவு பெரிய பொறுப்பு என்று உணர்ந்தோம். ஆகவே தீமோத்தேயுவுக்கு சரியான விஷயங்களை மாத்திரம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று விரும்பி நானும் ரேச்சலும் மிகவும் அக்கறையாக தேவனுடைய வார்த்தையை படிக்க ஆரம்பித்தோம் என்று, ஆண்ட்ரூ விளக்கினான்.

''நான் புத்தகக் கடையிலிருந்து வேதாகமம் ஒன்றையும், ஒத்த வாக்கியம் ஒன்றும் வாங்கி வந்தேன். நாங்கள் ஆரம்பத்திலேயே இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்ததினால் முதலில் அப்போஸ்தலர் நடபடிகளை வாசிக்க தீர்மானித்தோம். ஆனால் குறிப்பிட்ட சில பாடங்களை கற்க அவ்வப்போது அது சம்பந்தமான வேறு வசனப் பகுதிகளை ஒத்தவாக்கியத்தின் மூலம் தெரிந்து கொண்டோம்.

''நான் ஒரு கத்தோலிக்கப் பின்னணியையும், ரேச்சல் ஒரு பாப்திஸ்து சபையைச் சேர்ந்தவளாகவும் இருந்ததினால், ரேச்சல் செய்த முதல் காரியம், வேறுபட்ட பிரிவினைச் சபைகளின் பெயர்கள் ஒத்தவாக்கியத்தில் இடம் பெற்றுள்ளதா? எனப் பார்த்தாள். ஆச்சரியம் அளித்தது என்னவெனில் உண்மையாகவே, ஒரு சபையின் பெயரும் அதில் இடம்பெறவில்லை. கத்தோலிக்க சபை, பாப்திஸ்ட் சபை ஆகிய இவைகளைக் குறித்து எப்படி அதிகமாக அறிந்து கொள்ள முடியும், அவைகள் வேதாகமத்திலேயே இடம் பெறாவிட்டால்?

''ஆகவே நாங்கள் இரட்சிப்பைப்பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை அறிய முயற்சித்தோம். நாங்கள் படிக்கும்போது ஆச்சரியமான சில காரியங்களை கற்றுக் கொண்டோம். நாங்கள் அப் :2ம் அதிகாரத்திற்குச் சென்று பார்த்தபோது கிறிஸ்துவின் சபையின் ஆரம்பத்தை அங்கு காண முடிந்தது. மத்:16:18-ல் -இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பேதுரு இப்பொழுது செய்த அறிக்கையாகிய "கல்லின் மீது" நான் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' என்றார். அதே அதிகாரம் இறுதி வசனத்தில் அவருடைய சீஷர்களிடம் கூறியபொழுது'', இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (மத்:16:28.)

“நான் என் சபையைக் கட்டுவேன் என்று சொன்ன இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தம் அப்:2ம் அதிகாரத்தில் நிறைவேறுகிறது என்பதை நாம் அதைப் படிக்கும்போது அதை அறிந்துகொள்ள முடிகிறது. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு பல பாஷைகளில் பேசும்போது பேதுரு எழுந்து யோவேலின் நாட்களில் உரைக்கப்பட்ட படியே இது நடந்தேறுகிறது” என்று கூறுகிறான். அந்தச் சமயத்தில் ராஜ்யம் உண்மையாக ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

பின்பு பேதுரு அவர்களை நோக்கி, “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் “( அப்:2:38.) என்றான்.

“நாம் இதைச் செய்யாமல் இருக்கிறோம்” என்று நானும் ரேச்சலும் உணர்த்தப்பட்டோம். கத்தோலிக்க முறைமையின்படி எனக்கும் என் பெற்றோர்கள் நான் குழந்தையாய் இருக்கும்போது தெளிப்பு ஞானஸ்நானம் என்ற பெயரால் என்னை அர்ப்பணித்திருந்தார்கள். ரேச்சலும் ஞானஸ்நானம் எடுத்திருந்தாள், ஆனால் பாவமன்னிப்புக் கென்று அல்ல. ஆகவே அந்த 3000 பேர்கள் முதல் நாளில் செய்ததைப் போலவே நாமும் செய்ய வேண்டியது அவசியம் என்று உணர்ந்தோம். கடந்து போன வெள்ளிக்கிழமை நாங்கள் ஞானஸ்நானம் எடுத்தோம். எப்படி அந்த மக்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டதோ அப்படியே எங்களுடைய பாவங்களையும் தேவன் மன்னித்தார் என்று விசுவாசித்தோம். “ இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்” (அப். 2:47.)

“நீங்கள் கூறலாம் நீ முறையாக பட்டம் பெற்ற ஒரு போதகர் அல்ல, நீ எந்த ஒரு வேதாகமக் கல்லூரியிலும் சென்று பயிலவில்லை அப்படியிருக்க நீ சொல்வதெல்லாம் சரியென்று எப்படி நினைக்கிறாய்? என்று”

எல்லா மனிதர்களும் சொல்வது போல், நாங்கள் தான் சரி. மற்றவர்களெல்லாம் தவறு என்று ரேச்சலும் நானும் கூறவில்லை. உண்மை என்னவெனில், தேவனுடைய வசனங்கள் சரியானது. மற்றவைகளெல்லாம், அல்லது வசனத்தோடு ஒத்துப் போகாததெதுவோ அவையெல்லாம் தவறு. நான் ஒரு வசனத்தை வாசித்தேன், ரோமர் 3:4 அது கூறுகிறது, “தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக” இதைத்தான் நாங்கள் விசுவாசித்தோம். அநேக இடங்களில் சபைகளும், கொள்கைகளும் தேவனோடு ஒத்துப் போகாமல் இருக்கிறது. நாமோ தேவன் சொல்வதுதான் சரி என்று ஒத்துக் கொள்ள வேண்டும்.

“இதைத்தான் வரப்போகிற வாரங்களிலும் தொடர்ந்து. நாம் படிக்க உள்ளோம். எனவே நாம் அனைவரும் வேதாகமத்தில் கூறியிருக்கும் அந்த ஒரே சபையில் இணைந்திருப்போம்”

*B.B. Choate* *R.R.Nayagam.*

தெரிந்து கொள்ளுங்கள்

# "கர்த்தருடைய நாள்"

## பாடம் - 5

### முன்னுரை

1. ஆராதிக்கும் நாளாக, "வாரத்தின் முதல்நாளில்" கூடிவருவது, கண்டிப்பாக புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ளது.
2. பழைய ஏற்பாட்டின் கீழாக ஆராதித்தவர்கள், ஏழாம் நாளாகிய ஓய்வுநாளில் கூடிவந்தனர்.
3. இப்பாடத்தில், ஓய்வுநாள் ஆராதனை முடிவுற்றது குறித்து வேதாகமம் போதிக்கிறதென்பதைப் பார்க்க உள்ளோம்.

### விவாதம்

## I ஓய்வு நாள்

### A. ஓய்வு நாளைக் கடைப்பிடிக்கும்படி தேவன் ஏன் கட்டளையிட்டார்?

1. உபா. 5:3-இது தேவன் இஸ்ரவேலரை விடுதலையாக்கினதினிமித்தமாக கொடுக்கப்பட்டது.
2. உபா. 5:15-விடுதலையாக்கப்பட்டதை நினைவுகூறும்படியான நாள்.
3. ஆதாம் முதல் மோசே வரை ஓய்வுநாள் கடைபிடிக்கப்பட வில்லை.
4. இந்த நாளில் தேவன் தன்னுடைய கிரியைகளையெல்லாம் விட்டு ஓய்ந்திருக்கவில்லையா? என்று மனிதன் இன்று சொல்லமுடியும். இதை நாமும் ஒத்துக்கொள்கிறோம். ஆனாலும் தேவன் ஓய்ந்திருந்தாரே தவிர மனிதனல்ல.(ஆதி. 2:3).

### B. ஓய்வு நாளை யார் கடைபிடித்தது?

1. இஸ்ரவேலர். யாத். 31:13-17
2. இது தேவனுக்கும், இஸ்ரவேலுக்குமான ஒரு உடன்படிக்கை.
3. உபா. 5:2-3; இது குறிப்பான ஒன்று:- "இந்நாளில், இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும்"

## C. ஓய்வு நாளைக் கடைப்பிடித்தல் எப்பொழுது முடிவுற்றது?

1. ஓய்வு நாள் என்றென்றும் தொடர வேண்டியதாயிருந்தது என்பதை நிரூபிக்க சிலர். யாத் 31:16-ஐ மேற்கோள் காட்டுகின்றனர்.
2. இந்த வேத பகுதியில் வேறு சில காரியங்களும் போதிக்கப்பட்டுள்ளது தூபங்காட்டுதல், மிருகபலி (யாத் 30:8; எண் 28:1-10).
3. இவைகளும், இன்னும் சில காரியங்களும் தேவனுக்கும், இஸ்ரவேலருக்கும் "நித்திய அடையாளமாகவே" இருந்தது. ஆனால், இஸ்ரவேல் முடிவுக்கு வந்தபோது இவைகளும் முடிவுக்கு வந்து விட்டது. (ஆமோ.8:2-11)
4. ஆமோஸ்-ல் உள்ளவைகளின் நிறைவேறுதல் குறித்து இயேசு போதித்தார். (மத்.27;45,46; லூக்.23:44-46)

## D. ஓய்வு நாளின் முடிவு பற்றி தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டுள்ளது. (ஓசியா.2:11)

1. இவைகளின் நிறைவேறுதலை பவுல் சொல்லியுள்ளார். (கொலோ.2:14-17)
2. நிறைவேறின ஒன்றுக்கு எப்போதும் மதிப்பில்லை.

## E. இஸ்ரவேலரோடு முடிந்து போன உடன்படிக்கையில், 10 கட்டளைகளும் அடக்கம்.

1. இதன் நிறைவேறுதல் (எபி.8:6-13)(ரோம.7:1-7). 2 கொரி .3:11-13 ஆகிய பகுதிகளில் பேசப்பட்டுள்ளது.
2. மத்தேயு-5ம் அதிகாரம் நியாயப்பிரமாணத்திற்கும், சுவிசேஷத்திற்குமுள்ள வேறுபாட்டை குறிப்பிடுகிறது. (மத். 5:17-46).

## F. கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்துகொண்டு, நியாயப்பிரமாணத்தையும் கைக்கொள்ள முயற்சிக்கிறவர்கள், அவைகளின் விளைவைப் படித்து அறிந்து கொள்வது அவசியம்.

1. கலாத்தியர் 5:4
2. கலாத்தியர் 3:24-25

## G. ஓய்வுநாளை யார் எடுத்துப் போட்டது?

1. எபி. 10:9
2. கொலோ 2:14
3. கொலோ. 2:16

## II கர்த்தருடைய நாள் (வாரத்தின் முதல்நாள்)

### A. கர்த்தருடைய நாளின் முக்கியத்துவம்.

1. இயேசு இந்தநாளில்தான் உயிர்த்தெழுந்தார். (அ). மாற்.16:1-9. (ஆ). லூக்.24:1,13,21,46.
2. வாரத்தின் முதல்நாளிலே தான், இயேசு தேவனுடைய குமாரனென்று பலமாய் ரூபிக்கப்பட்டார்.(ரோம. 1:5)
3. இந்தப் புதிய நாளுக்கு தமது சீஷர்களை ஆயத்தமாக்கும்படியாக இயேசு, வாரத்தின் முதல்நாளிலே அவர்கள் கூடியிருந்த இடத்திலே வந்து சேர்ந்தார்.(யோவான் 20:19)
4. வாரத்தின் முதல்நாளிலேதான் பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார்.(யோவா.14:16;15:26 அப்.2:1-4)
5. இந்த நாளிலேதான் சபையானது ஆரம்பிக்கப்பட்டது. லேவி. 23:15-16 பெந்தெகொஸ்தே நாள் எப்பொழுதும் வாரத்தின் முதல் நாள்தான் என்று வெளிப்படுத்துகிறது. அப்.2:1-லிருந்து கீழே வசனங்களை வாசிக்கவும்.
6. இந்த நாளில்தான் முதலாவது சுவிசேஷப் பிரசங்கம் செய்யப்பட்டது. (அப்.2:22-41)
7. யோவான் இந்த நாளை, "கர்த்தருடைய நாள்" என்று அழைத்துள்ளார். (வெளி.1:10)

### B. கர்த்தருடைய நாளைக் கடைப்பிடித்தல்.

1. சபையானது இந்த நாளிலேதான் கூடி வந்தது. (அப்.20:7,1. 1 கொரி.16:1-2)
2. அப்.20:7 ன் பொருள்:
   a. இது வாரத்தின் முதல்நாள்
   b. இதன்பொருள்,"ஒவ்வொரு" வாரத்தின் முதல் நாளுமா?
   c. ஒரு குறிப்பிட்ட வாரத்தின் முதல்நாளென்று குறிப்பிடாதபடியால், எல்லா வாரத்தின் முதல்நாளும் தான்.
   d. வருடத்திற்கு 52 வாரங்கள், ஆகையால். 52 வாரத்தின் முதல் நாட்கள்.
   e. "ஓய்வு நாளை நினைவு கூருங்கள்" என்று கர்த்தர் கட்டளை யிட்டபோது, 10 கட்டளையில், 4-ம் கட்டளையை மீறாமல், எந்த ஓய்வுநாளை நாம் விடமுடியும்?

### முடிவுரை

1. ஓய்வு நாளானது, நினைவுகூரும் நாளாக, யூதர்களுக்கு மாத்திரமானது.
2. இயேசுவின் மரணத்தின் மூலம், தேவன் இதை எடுத்துப் போட்டார்.
3. சங். 118:22-24
4. நீங்கள் கீழ்ப்படியும்படியாக, இன்று இரண்டு பிரமாணங்கள் இல்லை. ஆகையால், வஞ்சிக்கப்படாதிருங்கள்.

**TONEY.L.SMITH** **EZSR**

# வெளிப்படுத்தின விசேஷம் பின்னணி (பாகம் -3)

வெளிப்படுத்தின விசேஷ நூலை சரியான முறையில் அணுகி படிக்கும்போது நினைவில் கொள்ள வேண்டிய பல முக்கியமான கருத்துகளை கடந்த கட்டுரையில் கண்டோம். இந்நூலைப் படிக்கும்போது, அநேகர் இக்கருத்துக் கொள்கைகளைப் பின்பற்றாமல் மீறினபடியால், அதன் விளைவாக ஏதாவதொருவகை தவறுக்குள் சென்றுவிட்டனர். இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததினால் நேர்ந்த, சில முக்கியமான கொள்கைத் தவறுகளை ஆராய உள்ளோம். இக்கட்டுரையில், ஆயிர வருட அரசாட்சி கொள்கை பற்றி பார்க்க உள்ளோம். "ஆயிரம் வருட அரசாட்சி" என்பது, இயேசுக் கிறிஸ்து பூமிக்கு வந்து ஆயிரம் வருடம் அரசாட்சி செய்வதற்கு முந்தின காலகட்டத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்ற நம்பிக்கையைக் குறிப்பதாகும். பெந்தெகொஸ்தேகாரர்களும், வேறு பல பிரிவினைச் சபையாரும் இதை விசுவாசிக்கின்றனர். இது ஒரு குழப்பமான கொள்கை. இது மிகத் தவறான ஒரு கொள்கை மட்டுமல்ல, சபையாகிய கர்த்தருடைய நித்திய இராஜ்ஜியத்திற்கு சம்பந்தமான தேவனுடைய வசனங்களின் உபதேசத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகவும் உள்ளது. இக்கொள்கையானது, வெளிப்படுத்துதல் நூலில் உள்ள பகுதிகளை மிக மோசமான, தவறான அளவில் புரிந்து கொண்டதை ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஆகவே, இந்நூலுக்கான பின்னணியில் இதையும் நாம் சேர்த்திருக்கிறோம்.

இக்கொள்கை பல மாறுபாடுகளைக் கொண்டிருந்தாலும், இக்கொள்கையைப் பின்பற்றுபவர்கள், தனித்தனியாக இரண்டு மரித்தோரின் உயிர்த்தெழுதல் இருக்குமென்று பொதுவாக நம்புகின்றனர். கிறிஸ்துவின் ஆயிரவருட ஆளுகைக்கு முன்பாக நீதிமான்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்றும், அந்த ஆயிரவருட அரசாட்சியின் முடிவிலே துன்மார்க்கர் உயிர்ப்பிக்கப்படுவார்கள் எனவும் நம்புகின்றனர். இதற்கு ஆதாரமாக அவர்கள் வெளி 20:4-6 வசனப் பகுதிக்கு தவறான விளக்கம் கொடுத்து மேற்கோள்காட்டுவர். அந்த வசனப் பகுதி, "முதலாம் உயிர்த்தெழுதல்" பற்றியும், அதில் பங்கு பெறுவதின் ஆசீர்வாதம் பற்றியும் பேசுகிறது. ஆனால் இப்படி விளக்கம் கொடுப்பது அந்த வேத பகுதியை தவறாகப் புரிந்து கொண்டதால் வந்ததாகும் ஏனெனில், மற்ற வேத வசனங்கள் இக்கருத்துக்கு முரண்படுகிறது.

முதலாவது, அப். 24:15-ன் படி, நீதிமான்களுக்கும் அநீதிமான்களுக்குமாகச் சேர்த்து ஒரு உயிர்த்தெழுதல் தான் இருக்கப் போகிறது. இன்னும், இயேசுக் கிறிஸ்து வரும்போது, ஒவ்வொருவரும் அவரைப் பார்க்கவும், அவருடைய சத்தத்தை கேட்கவும், செய்வார்கள். அந்நாளில், எல்லோரும்

உயிர்ப்பிக்கப்படுவார்கள். (யோவ 5:28-29;வெளி 1:7; 1 தெச 4:13-18) கிறிஸ்துவானவர் வந்து தனது பரிசுத்தவான்களைச் சேகரிக்கும் அதே நாளில் தானே, துன்மார்க்கர்மீது ஆக்கினையைச் செலுத்துவார் (2தெச 1:7-10) அந்நாளில் எல்லோரும் கிறிஸ்துவில் நியாயந்தீர்க்கப்படுவார்கள். (மத் 25:31,32,46). வெளி. 20:4-6 வசனப் பகுதிகளை விரிவாக பின்வரும் கட்டுரையில் பார்க்கலாம். ஆனால், இப்பகுதியிலுள்ள "முதலாம் உயிர்த்தெழுதல்" என்பது கிறிஸ்துவின் வருகையோடே அல்லது உலகத்தின் முடிவுடனே சம்பந்தப்படவில்லையென்பது இப்போதைக்கு போதுமானது. அதுமாத்திரமல்ல, இப்பகுதி, நீதிமான்களுக்கென்று ஒரு உயிர்த்தெழுதலென்றும், கண்டிப்பாகப் பேசுவதில்லை. வேதாகமத்தின் எந்தவொரு வசனமும் இப்படிப்பட்ட போதனையைச் செய்வதில்லை.

ஆயிர வருட அரசாட்சிக் கொள்கைக்காரர்கள், தங்களால் சொல்லப்படும் ஆளுகைக்கு முன்பு, இங்கு பரவசப்படுதலும், உபத்திரவமும் இருக்குமென்றும் கூட போதிக்கிறார்கள். "பரவசப்படுதல்" என்பது, திடீரென உயிரோடெழுந்திருக்கும் மரித்த பரிசுத்தவான்களும், மறுரூபமாக்கப்படும் உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்களும் சேர்ந்து, ஏழு வருடங்கள் ஆனந்த பாக்கியமடைவதற்காக நேரிடையாக பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகும். இவர்கள், இப்படிப்பட்ட வாசகம் அடங்கிய ஸ்டிக்கர்களை தங்கள் கார்களில், அல்லது வாகனங்களில் ஒட்டியிருப்பதை நீங்கள் பார்த்திருக்க கூடும். "இந்த வாகனம், ஓட்டுநர் இல்லாமல் ரோட்டில் செல்வதை நீங்கள் காணும்போது பரவசப்படுதல் நடந்தாயிற்று" என்று. இப்படிப்பட்ட முட்டாள்தனமான ஒரு கருத்தை தேவனுடைய வார்த்தைகளில் பார்க்க முடியாது. அவர்கள், இச்சமயத்தில் பரிசுத்தவான்கள் நியாயந் தீர்க்கப்பட்டு, வரப்போகும் பூமிக்குரிய ஆளுகையில், அவர்களுக்குரிய பலன்களும், ஸ்தானங்களும் கொடுக்கப்பட்டாயிற்று என்று சொல்கிறார்கள். அந்த ஏழு வருடங்களுக்குப் பிறகு, பரிசுத்தவான்கள் மீண்டுமாக கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருடம் அரசாளும்படியாய் பூமிக்கு கொண்டுவரப்படுவார்கள் என்று விசுவாசிக்கிறார்கள். "பரவசப்படுதல்" என்ற வார்த்தை வேதாகமத்தில் எங்குமே இல்லை. ஆனால், இக்கொள்கையாளர்கள் வெளி 4:1,2 வசனப் பகுதியை அடிக்கடி மேற்கோள்காட்டி, யோவான் தரிசனத்தில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது போலவே, அப்படியே இயேசுவின் வருகையில் எல்லா நீதிமான்களுக்கும் நடக்குமென்று சொல்கிறார்கள்.

இப்படிச்சொல்வது இந்த வேதபகுதியை தவறான முறையில் புரட்டுவதாகும். ஏனெனில், வெளி 4:1-2 வசனப்பகுதியில், யோவான் ஒரு தரிசனத்தின் மூலம் பரலோகத்திற்குச் செல்கிறார். இதற்கும், "பரவசமடைந்து" நாம் அப்படியே, நேரிடையான பொருளினடிப்படையில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவோம் என்பதற்கும் எச்சம்பந்தமுமில்லை.

உண்மையென்னவெனில், பொய்யாகச் சொல்லப்படும் இந்த "பரவசப்படுதல்" பற்றி ஒட்டுமொத்த வேதாகமத்தில் எங்குமே இல்லை. (உபா 4:2; நீதி. 30:5-6;வெளி 22:18-19). நியாயத்தீர்ப்பு நடந்தேறும்வரை பரிசுத்தவான்கள் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. (மத். 25:46;எபி 9:27-28) நீதிமான்களுக்காக இயேசு வரும்போது பரிசுத்தவான்கள் ஏழுவருடங்களுக்கு மாத்திரமல்ல, என்றென்றும் கர்த்தருடனே இருப்பார்கள் (1 தெச 4:17) பரிசுத்தவான்கள் ஒருமுறை பரலோகில் பிரவேசித்து விட்டால், மீண்டும் அதைவிட்டு வரமாட்டார்கள். (வெளி 3:12) நியாயத்தீர்ப்பும், இரட்சிப்பும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின்பு உடனடியாக இருக்கும்.(எபி 9:27-28)

ஆயிரம் வருட அரசாட்சிக்காரர்கள், பரவசப்படுதல் நடக்கும்போது, பூமியில் ஏழுவருட உபத்திரவகாலம் இருக்குமென்று நம்புகின்றனர். இதற்கு ஆதாரமாக வெளி.1:9 மற்றும் 7:14 வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் உபத்திரவத்தைக் காட்டுகின்றனர். அவர்கள், இந்த உபத்திரவ காலம், அர்மகெதோனில் நடக்கும் மகா யுத்தத்துடன் முடிவுறும் என்றும், (வெளி 16:12-16). அதன்பிறகு கிறிஸ்து வந்து பூமிக்குரிய ஆளுகையைத் தொடங்குவார் என்றும் நம்புகின்றனர். ஆனால், வேத வசனங்களில் உபத்திரவக்காலம் என்று எதுவும் சொல்லப்படவில்லை. உபத்திரவம் எல்லா சந்ததியிலும் வாழும் எல்லாக்கிறிஸ்தவர்களுக்கும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. (மத் 13:21,அப்.14:22,பிலிப்.1:29,2 தீமோ 3:12; யாக். 1:2-4) வெளி 1:9-ல் உள்ள "உபத்திரவம்" முதல் நூற்றாண்டின் இறுதியில் யோவான் தானே அனுபவித்த ஒன்றாகும். வெளி.7:14-ல் உள்ள "மகா உபத்திரவம்" என்பது, தேவனுக்கு உண்மையாயிருக்கிற எல்லோரும் அனுபவிக்கிற, சகித்துக்கொள்கிற, கடந்துவருகிற ஒன்றாகும். அது மாத்திரமல்ல, அர்மகெதோன் யுத்தமென்பதும் உண்மையான யுத்தமல்ல. அர்மகெதோன் என்பதின் பொருள், "மெகிதோமலை"என்பதாகும். மெதிதோ என்பது இஸ்ரவேலில் கர்மெல் பகுதியிலிருந்த மலையாகும். உண்மையாகவே இருந்த பல இடங்கள் வெளிப்படுத்தலில் உருவகமாகவும், அடையாளமாகவும், பயன்படுத்தப் பட்டுள்ளது. (வெளி.14:1;21:1;11:8;16:12) "தவளைகள்" பங்குகொண்டதென்பது உண்மையல்ல என்று வெளிப்படையாகவே தெரிகிறது (வெளி.16:13). ஆகவே, அந்த யுத்தத்தை சொல்லர்த்த முறையில் உண்மையென்று எடுத்துக்கொள்வதற்கு எந்த முகாந்தரமுமில்லை. வெளிப்படுத்தலில் உள்ள, அர்மகெதோன் என்பது, நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் ஒரு உருவக யுத்தமேயல்லாமல் வேறல்ல.

உபத்திரவ காலத்தின் முற்பகுதியில், எண்ணிலடங்காத யூதர்களின் மனமாற்றம் நிகழுமென்று ஆயிரவருட அரசாட்சிக்கொள்கைக்காரர்கள் நம்புகின்றனர். முதலாவது, 1,44,000 யூதர்கள், கிறிஸ்துவுக்காக மனமாற்றமடைவார்களென்றும், பின்பு அந்த 1,44,000 பேர் லட்சக் கணக்கான மற்றவர்களை மனமாற்றமடையச் செய்வார்களென்றும் சொல்கிறார்கள்.

இக்கருத்தை அவர்கள். வெளிப்படுத்தல் 7-ம் அதிகாரத்தை தவறாகப் புரிந்துகொண்டதின் விளைவாக பெற்றிருக்கின்றனர். இந்த அதிகாரம், இறுதிநாட்களில், மனமாற்ற காரியம் நடைபெறும் என்பதுபோல் எதையும் குறிப்பிடுவதில்லை. அதுமாத்திரமல்ல, அந்த எண் சொல் அர்த்தமுடைய ஒன்றல்ல. 1,44,000 என்பது சொல் அர்த்தமுடைய ஒன்றாக இருந்தால், நெற்றிகளில் அடையாளமென்பதும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களைச் சேர்ந்த. ஸ்தீரிகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் என்பதும் சொல் அர்த்தமுடையதாகவே இருக்கவேண்டும். (வெளி 7:4-8,14:1,3) அர்மகெதோன் யுத்தம் பற்றி நாம் பார்த்ததுபோல, சில பகுதிகளை உருவகமுறையிலும், மற்ற பகுதிகளை சொல்லர்த்த அடிப்படையிலும் எடுத்துக்கொள்வது முறையற்றதும், தவறானதுமாகும். ஆகையால், இறுதிகாலத்தில் 1,44,000 சரீரப்பிரகாரமான யூதர்கள் மனமாற்றப்படுவதென்பதும் இந்த 1,44,000 என்பதும், திரளான கூட்டமென்பதும் பரலோகமாகிய நித்தியத்திலிருக்கும் தேவனால் இரட்சிக்கப்பட்ட எல்லோரையும் குறிப்பதாகும். (வெளி 7:13-17).

ஆயிரவருட அரசாட்சிக்கொள்கையின் முக்கியமான கருத்து என்னவெனில் இயேசுவின் இறுதிவருகையில் பூமிக்குரிய ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்துவாரென்பதும், அது ஆயிரம் ஆண்டுகள் நீடிக்கும் என்பதுமாகும். இயேசு பூமிக்குரிய ராஜ்யத்தை ஏற்படுத்த முதல் முறை வந்தாரென்றும், ஆனால் எதிர்பாராத விதமாக, யூதர்கள் தங்களுக்கு ராஜாவாக இராதபடி அவரைத் தள்ளிவிட்டபடியால், அவர் மீண்டும் திரும்பிவரும்வரை இருக்கும்படியான, ஒரு தற்காலிக ஸ்தாபனமாக சபையை ஏற்படுத்தினார் என்றும் சொல்கிறார்கள். யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமான உடனே, கிறிஸ்து மீண்டும் உண்மையாகவே பூமிக்கு வந்து தன்னுடைய இராஜ்யத்தை ஏற்படுத்துவாரென்றும் சொல்கிறார்கள். பிறகு, எருசலேமிலிருந்து, தாவீதின் சிங்காசனத்தில் கிறிஸ்துவானவர் சரீரப்பிரகாரமாக உட்கார்ந்து, இந்த பூமிக்குண்டான இராஜ்யத்தை தனது பரிசுத்தவான்களுடன் சேர்ந்து ஆயிரம் வருடம் அரசாளுவார் என்றும் சொல்கின்றனர்.

அதற்கிடையில், இந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு சாத்தான் கட்டப்பட்டு, பாதாளத்தில் தள்ளி முத்திரையிடப்படவேண்டும். இக்கால கட்டத்தில் புறஜாதிகள் மனமாற்றமடையவேண்டும். இவைகளைத்தும் வெளி. 20:4-6 வசனப்பகுதிகளை முற்றிலுமாக புரட்டப்பட்டதால் வந்த தவறான கொள்கைகளே. ஆனால், இந்த வசனப்பகுதியில் இரண்டாம் வருகைப் பற்றியும், கிறிஸ்துவின் பூமிக்குண்டான ஆளுகைப்பற்றியும், சரீர உயிர்த்தெழுதல் பற்றியும், இன்னும் எருசலேம், தாவீதின் சிங்காசனம் என்று எதுவுமே குறிப்பிடப்படவில்லை. உண்மையென்னவெனில், கிறிஸ்து உண்மையாகவே பூமியில் ஆளுகை செய்யமாட்டார், ஏனெனில் அவர் மீண்டும் சரீரத்தில் ஒரு போதும் அறியப்படுவதில்லை.(2 கொரி 5:16).

அதுமட்டுமல்ல, எரேமியா, கோனியாவின் சந்ததியில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப் போகிறதில்லையென்று தீர்க்கதரிசனம் உரைத்துள்ளான். இயேசு இந்த சந்ததியைச் சேர்ந்தவர்தான். ஆகவே, தீர்க்கதரிசனம் அவருக்கும் பொருந்தும். (எரே. 22:30) மேலுமாக யூதர்கள் கிறிஸ்துவைத் தள்ளிவிட்டது, தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. எதிர்பாராமல் நடந்த ஒன்றல்ல.(ஏசா. 53:1,3, சங்.118:22-23) இயேசுவை பூமிக்குரிய ராஜாவாக ஆக்குவதற்கு யூதர்கள் செய்த முயற்சியை அவர்தான் தள்ளினாரேயொழிய, அவர்கள் தள்ளவில்லை. (யோவ.6:15). இயேசுக்கிறிஸ்து பரலோகத்திலுள்ள தமது சிங்காசனத்தில் இப்பொழுது ஆளுகை செய்கிறார். (தானி. 7:13-14,அப்.2:29-35;எபி 8:1 எபி.12:1:2; வெளி 3:21). ஆயிரவருட அரசாட்சிக் கொள்கை, இப்பொழுது நடைமுறையிலிருக்கும் தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யத்தை மறுக்கிறது. ரோம சாம்ராஜ்யத்தின் நாட்களில், ஆவிக்குரிய நித்திய ராஜ்யமானது ஏற்படுத்தப்படுமென்று தானியேல் தீர்க்கதரிசனம் உரைத்துள்ளான் (தானி 2:44).

இங்கே நிற்கிறவர்களில் சிலர் மரணத்தை ருசி பார்ப்பதற்குள்ளாக தன்னுடைய ராஜ்யத்தை ஏற்படுத்துவேன் என்று நமதாண்டவர் சொன்னார்.(மாற்கு 9:1)இன்னும், இயேசு தன்னுடைய ராஜ்யம் சரீரப்பிரகாரமான இராஜ்யமாக இல்லாமல் ஆவிக்குரிய இராஜ்யமாக இருக்குமென்று தெளிவாகச் சொல்லியுள்ளார். (யோவ.18:33-37) அந்த ஆவிக்குரிய ராஜ்யம் அவருடைய சபை என்றும், சொல்லியுள்ளார். (மத்.16:18-19) ஒருமுறை சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, இராஜ்யமானது, ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றாகவே பேசப்பட்டுள்ளது. (கொலோ.1:13; எபி வெளி 1:9) ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கையானது தாவீது, ஏசாயா, தானியேல் மற்றும் இயேசுவை பொய்த்தீர்க்கதரிசிகளாக மாற்றும். ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கை முற்றிலும் தவறானது. இது கிறிஸ்துவின் சபை பற்றிய புதிய ஏற்பாட்டு உபதேசத்தை மறுக்கிறது. சபையானது தேவனுடைய நித்திய நோக்கத்தின் படியானதேயொழிய பின் யோசனையின் படியானதல்ல. (எபே.3:9-11) சபையானது தற்காலிகமான ஒன்றுமல்ல, அது சதா காலங்களிலும், முடிவில்லாத உலகத்தில் தேவனை மகிமைப்படுத்தக் கூடியது. ஆமென் (எபே 3:21)

ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கை, தேவனுடைய வார்த்தையோடு கூட்டும், குறைக்கும் வேலையைச் செய்கிறது (உபா. 4:2; நீதி. 30:5-6;வெளி:22:18-19) அது மாத்திரமல்ல வெளிப்படுத்தின விசேஷத்தை முறையாகப் படிக்காவிட்டால் என்ன நடக்குமென்பதற்கு சரியான அத்தாட்சியாகவுமுள்ளது.

நமது அடுத்தக் கட்டுரை, இக்கொள்கையின் விளைவாக வந்த மற்றொரு தவறான உபதேசமாகிய "யெகோவா சாட்சிக் கொள்கை" பற்றியது.

**EZSR** **Jon Macon**

வாலிபர் பகுதி

# விருட்சத்தில் ஏறி விமோசனம் பெற்றவன்

உன்னதத்திலிருந்து உதித்த அருணோதயமாம், அருமை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இணையில்லா இன்ப நாமத்தினால், பராக்கிரமத்தை அலங்காரமாய் அணிந்திருக்கும் இளம் இதயங்களுக்கு இனிய வந்தனங்கள். இமயம் போல் தடைகள் எதிர் நின்றாலும், நதிபோல் சதிகள் கரைபுரண்டாலும், தகர்த்தெறிந்து, எதிர்நீச்சல் போடுவோம் என சூளுரைக்கும் வீரத்தோடு நிறுத்தாமல், அதைச் சிறப்பாய் செய்து முடிக்கும் விவேகமும் பெற்றிருந்தல் அவசியமென அறிவீர். விருட்சம் போல் பூத்துக்குலுங்கும் இப்பிராயத்தில், நீங்கள் ஆத்தும விமோசனம் அடையவேண்டும் என்பதே தேவனின் சித்தமாயிருக்கிறது.

தனது வாழ்க்கையின் முக்கியப் பகுதியில் தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு அறிவுரை கூறுகையில் "....நீ அவரைத் தேடினால், உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார். (1 நாளா 28:9). இந்த அறிவுரையை பெற்ற சாலொமோன். அள்ள அள்ளக் குறையாத அறிவுச் சுரபியாம் நீதிமொழிகளில் "நன்மையை ஜாக்கிரதையுடன் தேடுகிறவன் தயையைப் பெறுவான்; தீமையைத் தேடுகிறவனுக்கோ தீமையே வரும்" (நீதி. 11:27) என மொழிகிறார். ஞானியின் கூற்றிற்கேற்ப நாமும் நன்மையைத் தேடி, தயை பெற வேண்டும் என்பதற்காய், இறைமகன் இயேசுவைக் காண வகைதேடி காட்டத்தி விருட்சத்தில் ஏறி, கிறிஸ்து கனிவுடன் அழைத்ததால் மனம்மாறி ஆத்தும விமோசனம் பெற்ற சகேயுவைப் பற்றி சற்று சிந்திக்க அவனைச் சந்திப்போம் வாரீர்.

## இயேசுவைக் காண இயற்கைத் தடைகளை தகர்த்தெறிந்தவன்:

இறைமைந்தன் இயேசுவை "நல்ல போதகர்" என இவ்வுலகிற்குப் பறைசாற்ற வேண்டும் என்ற தொலை நோக்குடன் பரிசுத்த ஆவியானவரின் பேருதவியால் எழுதப்பட்டதுதான் நான்கு சுவிசேஷப் புத்தகங்களில் ஒன்றான

லூக்கா எழுதின நற்செய்தி நூல். இந்நூலின் பதினெட்டு அதிகாரங்களைப் புரட்டி, அடுத்த அதிகாரத்தை வாசிக்கத் தொடங்கியவுடன், சகேயுவின் சித்திரம் நம் கண் முன்னால் தோன்றி நிற்கும். ஏரோது யூதேயாவை ஆட்சி செய்யும் காலத்தில், இயேசு எரிகோவிற்கு எதிர்ப்பட்டு, அதின் வழியாய் நடந்துபோனார்.

எழில்மிகு எரிகோவின் வீதிகளில், ஏகசக்ராதிபதியினுடைய ஏகப்புதல்வரின் பின்னால் ஏகப்பட்ட கூட்டம் அலைமோதியது. அதில் நம் சகேயுவும் ஒருவன். வரி வசூலிப்பவர்களின் தலைவனாய் இருந்த இவன், இயேசு எப்படிப்பட்டவரோ எனப் பார்க்க வகை தேடினான் (லூக் 19:1,2) எவ்வகையிலாவது மேசியாவைக் கண்டுவிடவேண்டுமென்பதில் தீவிரம் காட்டினான். ஆனால், அவன் ஆசைநதிக்கு தடையாய் அணை கட்டியது இயேசுவின் பின் சென்ற திரளான கூட்டமும், அவனது குன்றிய வளர்ச்சியும்.

வாலிபர்களே! இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் ஒன்றிருக்கிறது. தொடர்ந்து படியுங்கள். சகேயு தான் எடுத்த முயற்சி தோல்வியுற்றது எனக் கண்டவுடன் துவண்டு போய் இவரைப் பார்க்க இயலாதெனத் திரும்பிப்போகாமல். மாறாக அத்திரள் கூட்டத்திற்கு முன் ஓடி ஒரு காட்டத்திமரத்தின் மீதேறி இயேசுவை வெற்றிகரமாகக் கண்டான். நாமும் நம்முடைய வாழ்வில் லட்சியத்திற்காக எடுக்கும் முயற்சியில் முதலில் தோல்விகண்டாலும் அவைகளை வெற்றிப்படியாக்கி நமது குறிக்கோளை நோக்கி முன்னேறவேண்டும்.

நண்பர்களே! மற்றொரு பாடத்தையும் கற்றுக் தருகிறான் இந்த சகேயு, நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் இறைவன் எப்படிப்பட்டவரோ என்பதில் உண்மையை அறிந்துகொள்வதற்கு நாம் விடாமுயற்சியுடன் வகை தேடவேண்டும். வாக்குமாறாதவரின் வார்த்தையைக் கவனியுங்கள், “தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்...” என்கிறார் (மத் 7:7) இயேசு அப்பொழுது இவ்வுலகில் வாழ்ந்ததால் சகேயு அவரைக் கண்டான். நாங்கள் எங்கு போய் காண்பது என்ற வினாவை கரிசனையுடன் கேட்பீர்கள் என நம்புகிறேன். தேவன் விளம்பின வேதாகமத்தில் புதிய

ஏற்பாட்டுப்பிரிவின் முதல் நான்கு புத்தகங்களின் பக்கங்களை திருப்புவீர்களானால் அந்த ஆத்தும நேசரை ஆன்மீகக் கண்களால் இன்றும் காணலாம்.

**இயேசுவை இல்லத்திலும் உள்ளத்திலும் ஏற்றுக்கொண்டான்:**

விரைந்தோடி விருட்சத்தில் ஏறி விண்ணவரைக் காணவேண்டும் என விரும்பிய சகேயுவைக் கண்டு, கருணை கொண்டு, "நீ சீக்கிரமாய் இறங்கி வா உன் வீட்டில் தங்கவேண்டுமென்றார்" (லூக்கா 19:5) எப்படிப்பட்டவரோ!! என எண்ணியபடி அமர்ந்திருந்தவனுக்கு **சீக்கிரமாய் இறங்கிவா** என்ற அழைப்புக் கிடைத்தவுடன் எப்படி இருந்திருக்கும் பாருங்கள். அதுவும் அழைத்தவர் யார் என நினைத்துப் பார்த்தால் அதின் ஆழம் உங்களுக்குத் தெரியும். இரட்சகரின் அழைப்பை ஏற்று சீக்கிரமாய் சந்தோஷத்துடன் இறங்கினவன் மீட்பரைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றான்.

இல்லத்தில் பரிசுத்தரின் பாதம் பட்டவுடன் தான் செய்த தவறுகளுக்காக சஞ்சலப்பட்டவனாய், சகேயு, "ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்கிறேன், ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்" என்றான் (லூக்கா 19:8) என்ன ஒரு மனமாற்றம்! இயேசுவின் சந்திப்பு இவனைத் தலைகீழாய் மாற்றியது. இருதயத்தின் நினைவுகளை அறிந்திருந்த இயேசு, (யோவா 2:24) இவன் மனமாற்றத்தை அங்கீகரித்து, அவன் வீட்டிற்கு இரட்சிப்பு வந்ததென்றும். அவன் ஆபிரகாமின் குமாரனானான் என்றும் மெச்சிக் கூறினார்.

விருட்சத்தில் ஏறிய இவன் எப்படி ஆத்தும விமோசனம் பெற்றான் என அறிந்திட ஆவலாய் இருப்பீர்கள் தானே? அவன் இதை அடைய ஒரு வேரை அறுக்க வேண்டியதாயிருந்தது. வாலிபர்களே! உங்கள் புருவங்கள் உயருகிறதோ? பவுல் பதிலளிக்கிறார் பாருங்கள் " பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது..." (1 தீமோ 6:10) ஆம்! ஆணி வேராய் தன்னிடமிருந்த பண ஆசையை அடியோடு அறுத்தெறிந்தான். சிந்திக்க வேண்டிய இந்த வயதில் நாமும் ஒரு பிரச்சனையை அணுகும்பொழுது பிரச்சனைக்குரிய மூல காரணத்தைக் கண்டு அதை அகற்றிவிட்டால் அது பிரச்சனையிலிருந்து நமக்கு நிரந்தர

தீர்வு தரும் என்பதில் ஐயமேதுமில்லை.

பாவத்திலிருந்து மனந்திரும்பிய வனை இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொண்டாரே, என்னையும் ஏற்றுக் கொள்வாரா? என நீங்கள் அறிய ஆவலாய் இருப்பீர்கள். "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத் 11:28) என்று அன்போடே அழைக்கிறார். பாவ பார சுமையதால் சோர்ந்து, எங்கே இறக்கி வைப்பேன் என ஏங்கி நிற்கும் உங்களை இருகரம் நீட்டி அழைக்கிறார் நமதருமை ஆண்டவர் இயேசு. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவர் மேல் விசுவாசம் கொண்டவர்களாகி (எபி.11:6) பாவத்திலிருந்து மனந்திரும்பி(அப் 2:38), (அப் 3:20) இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு (அப்8:37) தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டியது தான். (அப் 22:16;2:38) சரி, சகேயு இதையெல்லாம் செய்தானா என்ற கேள்வி இளைஞர்களாகிய உங்களுடைய உள்ளத்தில் உடனே விழித்தெழும். அவன் செய்யவில்லை என்பதுதான் பதிலாய் இருந்தாலும் அதின் காரணத்தைக் கூறுகிறேன் கேளுங்கள். அவன் பழைய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்த மனிதன், ஏனெனில், இயேசுவே பழைய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்தவர்தான் (கலா 4:5), அதுமாத்திரமல்ல, இயேசு நேரடியாய் பாவங்களை மன்னிக்கிற அதிகாரத்தைப் பெற்றிருந்தார். (மாற்கு 2:10).மேலும் இயேசு போதித்த ஞானஸ்நானம் அப்பொழுது அமுலில் இல்லை. (மத். 28:18-20)(மாற்கு16:16) உயிர்த்தெழுந்த பின்பே அவர் அந்த கட்டளையைக் கொடுத்தார். அதற்குப் பின்பாக வாழும் நாம் அதை செய்வது அவசியம். முன்னுரை நூற்படி நமக்கு முன்னோடியாய் வந்த இயேசுவைக் காண இவன், முன் ஓடி விருட்சத்தில் ஏறி தனது எண்ணத்தில் மாறி ஆத்தும விமோசனம் பெற்றதால், இவனும் நமக்கொரு முன்மாதிரியாய் திகழ்கிறான். நாமும் சகேயுவைப் போல் விரைந்தோடி நன்மையைத் தேடி தேவ தயையை பெறுவோம்!

**ஜே. பிக்கின்ஸ்**

# தேவனை நேசித்தல்

ஒருமுறை சபை அங்கத்தினர்களில் ஒருவர், "மற்ற பிரிவுசபையாரும் தேவன் மீது அன்பு செலுத்துவதால், இரட்சிக்கப்படுவார்கள்," என்றார். இந்த சகோதரன் "மற்ற பிரிவுசபைகள்" என குறிப்பிடுகையில், கிறிஸ்துவின் சபையும் ஒரு பிரிவு சபை தான் என்பதை போல் பேசுகிறார். நான் இதை திடமாய் மறுக்கிறேன். கர்த்தருடைய சபை ஒரு பிரிவுசபையாய் இருக்குமானால், நாமும் மற்ற பிரிவுசபையின் அங்கத்தினராய் இருந்திருக்கலாமே. நான் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட ஏதோ ஒரு இயக்கத்தில் சேர்ந்திருக்கலாமே. இந்தக் காரியத்தின் உண்மை என்னவென்றால், பிரிவுசபைகள் எல்லாம் பாவத்தின் விளைவுகளே. வேதாகமத்தில் கர்த்தரின் சபையாகிய ஒரே சரீரத்தைக் குறித்து வாசித்தேன். [கொலோ 1:24]; அந்த பரிசுத்தப் புத்தகத்தின் பக்கங்களில் எவ்வளவு தேடியும், ஒரு பிரிவு சபையையும் என்னால் காணமுடியவில்லை. தேவனுடைய வார்த்தை எந்த பிரிவுசபைகளையும் அறியாது, அதற்கென எந்த வாக்குத்தத்தமும் கிடையாது.

கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய தவறிய எந்த நபருக்கும் இரட்சிப்பின் நம்பிக்கையை தருவது எனக்கு உகந்ததல்ல [II தெச 1:7-9] அன்பைப் பற்றி சிந்திக்கையில், - தேவனிடத்தில் வைக்கும் அன்பு, மனிதனுக்கு நன்மையாக அமைவது எப்பொழுதென்றுகேட்டால், அவனை தேவனுக்கு கீழ்ப்படியும்படி அது வழி நடத்தும் போதுதான்(யோவா14:23ல்) இயேசு கூறுகையில், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" மீண்டுமாக நாம் வாசிக்கிறோம்;" என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்.... என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான்"[யோ 14:21,24] இந்த வசனங்கள் நமக்கு ஒன்றைத் தெளிவாகக் காட்டுகிறது. தன்னை நேசித்து, கீழ்ப்படியும் படி அன்பு செலுத்துகிறவன் மீதே அவரும் அன்பை செலுத்தி. அவனின் அன்பை அங்கீகரிக்கிறார். பாவமன்னிப்படைய நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பது, கர்த்தரின் கட்டளைகளில் ஒன்றாய் இருக்கிறது (மாற்கு 16:16;அப் 2:38) பாவமன்னிப்புக்கும் அல்லது நித்திய இரட்சிப்புக்கும், ஞானஸ்நானத்திற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இருப்பதாக பல பிரிவுச்சபைகள் நம்புகிறதில்லை. இந்த எளிதான கட்டளையை புறக்கணிக்கிறவர்களாலே, தேவன் மீது அன்பு செலுத்த

முடியுமா? உண்மையில், மேற்கூறப்பட்டது போல் ஒருவன் தேவன் மீது அன்பு செலுத்துவது சரியானதாக இருந்தால், இந்த பூமியில் பிரிவுகளே இராது.

புதிய ஏற்பாட்டிலுள்ள சபையின் பிரிவற்ற தன்மையைக் குறித்து மீண்டும் நாம் படிப்பது அவசியம். அந்த சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதன் அங்கத்தினராயிருக்கிறான். பூமியில் இரண்டு ராஜ்ஜியங்கள் உள்ளன - ஒன்று தேவனுடைய ராஜ்ஜியம் மற்றொன்று சாத்தானுடைய ராஜ்ஜியம். தேவனுக்கு கீழ்ப்படிபவர்களெல்லாரும் சபையிலே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் - அதாவது தேவனுடைய ராஜ்ஜியத்திலே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் (அப் 2:47) கிறிஸ்துவே அவருடைய சபைக்கு தலையாயும், அவருடைய சபையாகிய சரீரத்துக்கு இரட்சகராயும் இருக்கிறார்.(எபே 5:28) இந்தக் காரணத்தால் கர்த்தருடைய சபைக்குப் புறம்பாக இரட்சிப்பின் வாக்குத்தத்தம் எதுவும் இல்லை. வேதாகமம் இப்படி சொல்லியிருக்க, நாம் மனிதன் உண்டாக்கிய மாற்று சபைகளில் இருக்கவேண்டிய அவசியமென்ன?

*ஆராய்வீர்! முடிவெடுப்பீர்*

BOBBY KEY

## உங்கள் கவனத்திற்கு

அதிகத் தரமுள்ள, பல வண்ணத் தாள்களைக் கொண்டு, நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு, சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு, எடுப்பான தோற்றம் கொண்ட **சுவிசேஷக் கைப்பிரதிகள்** (Gospel Tracts) உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. தேவைக்கு முந்துங்கள்!

**தலைப்புகள்**

1. **உன்னை நீயே எண்ணிப்பார்**
2. **கண் இல்லாதவன் கண்டு கொண்டான்**
3. **மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?**
4. **இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால்...**
5. **ஞானஸ்நானம்**
6. **யார் கிறிஸ்தவன்?**
7. **ஆராதனை**
8. **சபை என்பது என்ன?**

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் - 27

காங்கேயம் - 638 701 , இந்தியா

✆ 04257 20030

# மதமாற்றமா? அல்லது மனமாற்றமா?

மனமாற்றமே ஆம்! கிறிஸ்தவம் யாரையும் மதமாற்றம் செய்வது கிடையாது. மனமாற்றத்தையே செய்கிறது. "ஒரு நிலையிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றிக் கொள்வது" என்று ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி சொல்லுகிறது. இதை ஒருவன் கட்டாயத்தினால் செய்ய முடியாது.

## ***மனமாற்றம்* (Conversion) *என்பதற்குரிய சரியான விளக்கம் என்ன?***

இதற்குரிய சரியான பதிலை பரிசுத்த வேதாகமம் மாத்திரமே நமக்குத் தெளிவாக கொடுக்கமுடியும். மனமாற்றத்துக்குரிய தேவை மாற்றமே **(Change)** அநேக மாற்றங்கள் இயற்கையாகவே நிகழுகிறது. 'மரமானது மாற்றம் பெற்று பேப்பராகிறது. "ஒரு சிறு நிலக்கரியோ அநேக மாற்றங்களைப் பெற்று வைரமாக ஜொலிக்கிறது".

ஆன்மீக மாற்றம் என்றால் 'பாவ வாழ்க்கையிலிருந்து நீதிக்குரிய வாழ்க்கைக்கு மாறுவது. மத்தேயு 18:3ல் இயேசு சொல்லுகிறார் "நீங்கள் மனமாற்றமடைந்து , சிறுபிள்ளைகளைப் போல் மாறாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்".

ஒரு மனிதன் அல்லது ஒரு மனுஷி மனமாற்றம் அடைகிறார்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையான பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்றுதான் அர்த்தம் பஞ்சமென்றால் உணவினால் ஏற்படும் பஞ்சமல்ல, வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றியும் வாழ்வதன் நோக்கத்தைப் பற்றின பஞ்சமே ஏற்பட்டிருக்கிறது. இவர்களுடைய மனசாட்சி வாதிக்கப்பட்டு, சர்வவல்லமையுள்ள தேவனுடைய வார்த்தைகள் தொடர்ந்து ஆத்துமாவில் ஒரு பாரத்தை ஏற்படுத்தி அவர்களை, "நான் என் பாவத்துக்காக என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்வியை கேட்க வைக்கிறது.

ஆத்துமாவில் எல்லாவற்றையும் விற்று போட்ட உணர்வு (லூக். 15:13,14) உலக சிற்றின்பங்கள் யாவும் வீணானவைகளாகி விடுகின்றன. தேவனுடைய

சித்தத்திற்கு அவர்கள் உட்படும்வரை அவர்களுக்கு சமாதானமேயில்லை. மனித வாழ்க்கை பற்பல ஆபத்துக்களையும் துன்பங்களையும் சுமந்த ஜீவியமாயிருப்பதாலும் மரணம் அவனுக்கு கண்டிப்பான ஒன்றாக இருப்பதாலும் தேவனில்லாமலும், கிறிஸ்துவைச் சாராமலும் ஆவிக்குரிய விளக்கங்களை ஆராய முற்படுவதும் ஆக்கினைக் கேதுவாக்கிடும். ஆகவே ஒருவன் மனமாற்றமடைதல் வேண்டும்.

## மனமாற்றத்தில் அடங்கியுள்ளவைகள்

1. மாற்றப்பட்ட இருதயம்:- இது விசுவாசத்தினால்தான் முடியும். (அப் 15:9)

2. மாற்றப்பட்ட ஆவிக்குரிய அதிகாரம்:- இது கிறிஸ்துவை அறிக்கையிடுவதால் வருகிறது. (ரோமர் 10:10; அப் 8:37)

3. மாற்றப்பட்ட நிலை:- திருமுழுக்கினால் ஏற்படும் உறவுகளின் மாற்றம் (கலா 3:26,27) மனமாற்றம் **(Conversion)** கண்டிப்பாக ஒவ்வொருவருக்கும் தேவை காரணம் மனமாற்றமடையாத ஒரு பாவி தேவனால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டான். அவன் தேவனை சந்திக்கும் தகுதியையு மிழந்துவிடுகிறான். பாவிகள் யாவரும் பரிசுத்தவான்களாக மனமாற்றமடைதல் வேண்டும். இது ஒரு மகத்தான காரியம் இதை தேவன்தான் செம்மையாக செய்து முடிக்க முடியும்.

ஒருவேளை, நான் மனமாற்றமடைந்து ஆண்டவரை அறிய, வாழ்க்கையில் சரியான மாற்றம் பெற, நான் என்னை தாழ்த்தி, ஆண்டவரைத் தேடி அவருடைய கட்டளைகளை கைக் கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தேவனுடைய ஒரே பேறான குமாரன். இந்த பூமிக்கு வந்து நம்மை மீட்க தம்மையே ஒப்புக்கொடுத்தார் (ரோமர் 5:8) அவர் சிலுவையில் தொங்கி, காயப்பட்டு, நொறுக்கப்பட்டார். ஒரு பாவி மனந்திரும்பி, அவருடைய சுவிசேஷத்துக்கு கீழ்படியும்போது அவரால்தான் அவனை மன்னிக்க முடியும்.

இன்றைக்கு நீ மன மாற்றமடைந்திருக்கிறாயா?

மதமாற்றமல்ல! மனமாற்றம்?!

தமிழில்
***வே. தானியேல் துரைராஜன்***
திருச்சி.

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20, JULY 99
JULY.99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு."**சான்றிதழ்**" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER
BOOK-POST

TO

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.